**மத்திய மாகாண சபை - 2012**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 மறுப்பு அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவத்தின் காரணமாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன். அதற்கிணங்க இந்நிதிக்கூற்றுக்கள் மீது நான் அபிப்பிராயம் ஒன்றினைத் தெரிவிக்கவில்லை.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

**(அ) ஏனைய கணக்குகள்**

2013 ஏப்ரல் 30 ஆம் திகதியில் உள்ளவாறு மீளாய்வாண்டிற்கான மாகாண சபையின் ஏனைய கணக்குகளைச் சமர்ப்பித்தல் முன்னேற்றம் கீழே தரப்படுகின்றது.

**2012 ஆம் ஆண்டிற்குரிய**

| | | கணக்குகளின் மொத்த எண்ணிக்கை | சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளின் எண்ணிக்கை | சமர்ப்பிக்கப்படாத கணக்குகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | ஒதுக்கீட்டுக் கணக்குகள் | 32 | 32 | - |
| (ii) | வருமானக் கணக்குகள் | 02 | 02 | - |
| (iii) | மாகாண சபை உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் | 65 | 65 | - |
| (vi) | வணிக முற்பணக் கணக்குகள் | 06 | 04 | 02 |
| (v) | நியதிச்சட்டக் கணக்குகள் | 02 | - | 02 |
| (vi) | உறுப்பினர்களுக்கான முற்பணக் கணக்குகள் | 01 | 01 | - |
| | | 108 | 104 | 04 |

மத்திய மாகாண வலய பொருளாதார அபிவிருத்தி நிறுவனம் தாபிக்கப்பட்ட 2008 ஆகஸ்ட் 12 ஆந் திகதி முதல் 2014 ஏப்ரல் 30 ஆந் திகதி வரை கணக்குகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2008 ஆகஸ்ட் 22 ஆந் திகதிய 1563/32 ஆம் இலக்க இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அதி விசேட வர்த்தமானிப் பத்திரிகையின் iv (அ) ஆம் பிரிவில் உள்ளடங்கியுள்ள நிறுவன நியதிகளின் 6 ஆம் பந்தியின் பிரகாரம் வலய பொருளாதார அபிவிருத்தி நிறுவனத்திற்காக உரிய கணக்குகள் பேணப்பட வேண்டுமென்றும் அக்கணக்குகள் அதிலுள்ள 6.5 ஆம் பந்தியின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டும் என்றும், அந்நிறுவனத்தின் சகல கணக்குகளும் கணக்காய்வு செய்யப்பட்டதன் பின்னர் ஒவ்வொரு கணக்கு தொடர்பிலும் தொடர்ந்து வரும் வருடத்தின் மார்ச் 31 ஆந் திகதிக்கு முன்னர் மத்திய மாகாண சபைக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டுமென்றும் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், நிறுவனம் தாபிக்கப்பட்ட திகதி முதல் உரிய கணக்குகள் தயாரிக்கப்பட்டு 2014 ஏப்ரல் 30 ஆந் திகதியளவிலேனும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் தொடக்கத்தில் ரூபா 426,165 தொகையான விதை இருப்புக்களும் ஆண்டினுள் ரூபா 473,080 விதைகளின் கொள்வனவும் இடம்பெற்றிருந்ததுடன் அதன் படி மீளாய்வாண்டில் கல்பாலம பண்ணையின் நுகர்வுக்காக காணப்பட்ட விதை இருப்பின் கிரயம் ரூபா 899,245 ஆகும். இருப்பினும் ஆண்டிறுதியின் விதை இருப்பு ரூபா 966,193 தொகையாக காணப்பட்டமையால் மீளாய்வாண்டினுள் விதை நிலங்களில் நடுவதற்காக பயன்படுத்தப்பட்டிருந்த கரட், லீக்ஸ், உருளைக் கிழங்கு போன்ற பயிர்ச்செய்கைக்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த உற்பத்திக் கணக்கில் குறிப்பிடப்பட்டிருந்த உற்பத்திக் கிரயத்தினுள் உள்ளடங்கியிருக்காமை காரணமாக ஆண்டின் இலாபம் அத்தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) கைத்தொழில் அபிவிருத்தி வணிக மேம்படுத்தல் திணைக்களத்தின் அரசாங்க நிறுவனங்களிடமிருந்து கிடைக்கின்ற கட்டளைகள் பதிவேட்டின் படி, அரசாங்க நிறுவனங்களிற்கு விநியோகிக்கப்பட்ட உற்பத்திகளுக்காக 2012 ஆம் ஆண்டிற்கு

ரூபா 131,096 தொகை அறவிடப்பட வேண்டியிருந்த போதிலும், அப்பெறுமதி வர்த்தக முற்பணக் கணக்கில் கடன் விற்பனைகள் மற்றும் கடன்பட்டோர் கணக்குகளின் கீழ் எடுத்துவரப்பட்டிருந்தன.

(இ) புடவைக் கைத்தொழில் திணைக்களத்தின் கைத்தொழிலாளர்களிற்காகச் செலுத்தப்பட்டிருந்த ஊழியர் சேமலாப நிதியத்தில் தொழில்தருனரின் பங்களிப்பு ரூபா 2,503,935 தொகையும் ஊழியர் சேமலாப நிதியத்தில் தொழிலாளரின் பங்களிப்பு ரூபா 625,988 தொகையும் குறித்த கணக்குகளிற்கு வரவு வைக்கப்படாது சம்பளங்களும் கூலிகளும் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டிருந்தமையால் சம்பளங்களும் கூலிகளும் கணக்கு ரூபா 3,129,923 தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஈ) புடவைகள் கைத்தொழில் திணைக்களத்தின் 05 புடவைக் கைத்தொழில் நிலையங்களின் பொருள் மெய்மைய்வு அறிக்கைகளின் படி எரிபொருள் மற்றும் விறகுகளின் பெறுமதி ரூபா 72,600 ஆன போதிலும், கணக்கில் அது ரூபா 159,656 எனப் பதியப்பட்டிருந்தமையால் ஆண்டின் இலாபம் ரூபா 87,056 தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(உ) மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபையால் அவசர இடர் புனர்நிர்மாண செயற்திட்டத்துடன் செய்துகொள்ளப்பட்ட புரிந்துணர்வுக்கமைய செயற்திட்டத்திற்காக அதிகார சபையால் முற்பணம் என்ற வகையில் செய்யப்பட்ட ரூபா 8,261,699 செலவினம் செயற்திட்டத்தின் மூலம் சாட்டப்படாமையால் அதில் ரூபா 6,481,393 தொகை மீளாய்வாண்டின் செலவினமாகக் கருதப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் மீதியான ரூபா 1,780,306 தொகையினை எதிர்வரும் ஆண்டுகளின் இலாபத்திற்கெதிராக பதிவழிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது.

(ஊ) பயணிகள் போக்குவரத்துச் சேவைகள் அதிகாரசபையால் இலங்கை தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவிற்கு மீளாய்வாண்டு தொடர்பில் செலுத்த வேண்டிய விசேட சுற்றுலா வருமானக் கட்டணங்கள் ரூபா 454,538 இற்காக கணக்குகளில் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கவில்லை.

**1.2.3 வங்கி கணக்கிணக்கக் கூற்று**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 02 மாகாண திணைக்களங்களினதும் நிறுவனங்களினதும் 02 வங்கிக் கணக்குகளிற்குரிய வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்களைத் தயாரிப்பதில் தாமதம் ஏற்பட்டிருந்தது.

(ஆ) 06 மாத காலத்திற்கு மேற்பட்டிருந்த தேறாத வைப்புக்கள் ரூபா 1,288,904 தொடர்பாக வங்கியிடம் விசாரித்து பின்தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) ரூபா 426,191 தொகையான 26 மதிப்பிழந்த காசோலைகள் தொடர்பில் நிதிப்பிரமாணத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 07 வங்கிக் கணக்குகளுக்குரிய இனங்காணப்படாத வரவு ரூபா 162,405 ஆகவும் இனங்காணப்படாத செலவு ரூபா 2,643,703 ஆகவும் இருந்தன.

**1.2.4 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) புடவைக் கைத்தொழில் திணைக்களத்தினால் 05 ஆண்டுகளில் கடன் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டிருந்த ஆடைகள் விற்பனைகளிலிருந்து ரூபா 983,658 தொகை மேலதிகமாக அறவிடப்பட்டிருந்த போதிலும், குறிப்பிட்ட நபர்களை இனங்கண்டு இத்தொகையினை மீளளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கைத்தொழில் அபிவிருத்தி வணிக மேம்படுத்தல் திணைக்களத்தின் ஒவ்வொரு முற்பணக் கணக்கு நடவடிக்கைக்காகவும் கிடைக்க வேண்டியிருந்த ரூபா 360,779 தொகை ஓராண்டிற்கும் மேற்பட்ட காலமாக நிலுவையாகக் காணப்பட்டது.

(இ) புடவைக் கைத்தொழில் உற்பத்திகளை கடனுக்கு விற்கப்பட்டமையால் ரூபா 7,278,881 தொகை திணைக்களத்திற்கு கிடைக்க வேண்டியிருந்ததுடன் அம்மீதியில் 1 முதல் 5 ஆண்டுகள் வரையான காலத்திற்குரிய மீதிகள் காணப்பட்டன.

(ஈ) இயந்திரப் பொறியியலாளர் அலுவலகத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்த வெளிவாரி வாகனங்கள் திருத்த வேலைகளிற்காக 2010 ஆம் ஆண்டு முதல் கிடைக்க வேண்டியிருந்த ரூபா 1,852,299 தொகையினை வரவழைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 26 பிரதேச செயலங்களில் காணப்பட்ட நிலுவையான வாகன வருமான அனுமதிப் பத்திரங்கள் மற்றும் அரசாங்கக் காணிகளுக்கான நிலுவையான வரி வருமானம் ரூபா 22,367,404 ஆகக் காணப்பட்டதுடன் அவற்றை அறவிடுதல் பலவீனமான நிலையில் காணப்பட்டது.

(ஊ) பயணிகள் போக்குவரத்து அதிகாரசபையிடமிருந்து மீளாய்வாண்டு தொடர்பில் அறவிடப்பட வேண்டியிருந்த கடை அறை வாடகை வருமானம் ரூபா 644,400 ஆன போதிலும், அதில் ரூபா 26,450 மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது. வாடகை வருமானத்தை அறவிடுதல் 4 சதவீதம் என்ற மிகக் குறைவான மட்டத்தில் காணப்பட்டது. மீளாய்வாண்டின் இறுதியில் பெறவேண்டியிருந்த ஒட்டுமொத்த நிலுவை கடை அறைகள் வாடகை ரூபா 2,097,650 ஆனதுடன் அவை 01 முதல் 07 ஆண்டுகள் வரையான காலவீச்சிலிருந்து நிலவி வருகின்றவையாகும்.

(எ) புடவைக் கைத்தொழில் திணைக்களத்தினால் 2007 முதல் 2011 வரையான ஆண்டினுள் 67 நிறுவனங்களிற்குரிய உத்தியோகத்தர்களுக்கு ரூபா 1,489,853 இற்கு கடன் அடிப்படையில் துணிகள் விற்பனை செய்யப்பட்டிருந்த போதிலும், அதில் ஒரு தவணைப்பணமேனும் அறவிடப்பட்டிருக்கவில்லை. கடந்த 05 ஆண்டுகளில் கடன் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டிருந்த துணி விற்பனைகளிலிருந்து ரூபா 14,349,569 தொகை அறவிடப்பட வேண்டிய போதிலும், அவற்றை அறவிடுவதற்கு போதியளவு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**1.2.5 பொது வைப்புக் கணக்குகள்**

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 02 ஆண்டுகளிற்கு மேற்பட்ட ரூபா 94,599,726 கூட்டுத்தொகையான பொது வைப்புக் கணக்கு மீதிகள் தொடர்பில் நிதிப்பிரமாணம் 571 இன் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.2.6 கணக்காய்விற்கான சான்றுகள் இல்லாமை

**(அ) பதிலளிக்கப்படாத கணக்காய்வு ஐய வினாக்கள்**

2012 திசெம்பர் 31 ஆந் திகதி வரை 110 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதில் வழங்கப்படாதிருந்ததுடன், அந்த ஐயவினாக்களில் உள்ளடக்கப்பட்ட கணிப்பிடக்கூடிய கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதி ரூபா 400,800,407 ஆக இருந்தது.

**(ஆ) தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்காமை**

நிலையான சொத்துக்கள் பதிவேடு, உரித்துறுதிகள், மெய்மையாய்வுச் சபை அறிக்கை, வாகனங்கள் பதிவேடு, மீதி உறுதிப்படுத்தல் கடிதங்கள், கடன் கோவைகள் போன்ற தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 1,040,242,689 கூட்டுத்தொகையான கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

**(இ) கொடுப்பனவு உறுதிச் சீட்டுக்களை கணக்காய்வுக்காகச் சமர்ப்பிக்காமை**

ரூபா 102,275,768 கூட்டுப்பெறுமதியுடைய 171 கொடுப்பனவு உறுதிச் சீட்டுக்கள் கணக்காய்வுக்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.2.7 இணக்கமின்மைகள்

கீழே காட்டப்பட்டுள்ள சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணக்கமின்மைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| (அ) 2000 இன் 01 ஆம் இலக்க மத்திய மாகாண பயணிகள் போக்குவரத்து சேவை அதிகார சபை நியதிச் சட்டம் | |
| 6 மற்றும் 19(ஆ) ஆம் பிரிவுகள் | மத்திய மாகாண பயணிகள் போக்குவரத்து சேவை அதிகாரசபையின் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் மாத்திரம் வீதி |

அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட வேண்டிய போதிலும், அவ்வாறான அங்கீகாரமின்றி அதன் தலைவரால் 2011 சனவரி முதல் ஒக்தோபர் வரையான காலப்பகுதியில் 142 வீதி அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டிருந்தன.

(ஆ) நிதிப்பிரமாணங்கள்

| | |
|---|---|
| (i) நி.பி. 103(1)(ஆ), 104(1), 104(3) மற்றும் 104(4) | கண்டி, மாத்தளை மற்றும் நுவரெலியா சுகாதாரச் சேவைகள் பணிப்பாளர்களின் அலுவலகங்களுக்கு உரித்தான 19 வாகனங்களிற்கு ஏற்பட்டிருந்த விபத்துக்கள் தொடர்பில் பொலிஸ் முறைப்பாடுகள் காணப்படாதிருந்ததுடன் 04 வாகனங்களுக்குரிய விபத்துக்கள் தொடர்பில் ஆரம்ப அறிக்கைகளும், 16 வாகனங்களுக்குரிய விபத்துக்கள் தொடர்பில் முழுமையான அறிக்கைகளும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) நி.பி 1645(அ) | வாகன சம்பவப் புத்தகங்கள் நாளதுவரையாக பேணிவரப்பட வேண்டிய போதிலும், பன்வில மற்றும் உடுவெல சுகாதார மருத்துவ உத்தியோகத்தர் அலுவலகத்திற்குரிய 02 வாகனங்களில் சம்பவப் புத்தகங்களில் வாகனங்களின் விபரங்களும் பயணங்களின் மாதாந்தப் பொழிப்புக்களும் தயாரிக்கப் பட்டிருக்கவில்லை. |
| (iii) நி.பி 1646 | பொறியியல் சேவைகள் திணைக்களத்தின் 09 வாகனங்களுக்குரிய ஓட்டக் குறிப்புகள் தொடர்ச்சியாக சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன் போக்குவரத்துத் திணைக்களத்திற்குச் சொந்தமான வாகனமொன்றின் நாளாந்த ஓட்டக் குறிப்புகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

(இ) மத்திய மாகாண நிதி ஒழுங்கு விதிகள் கையேடு

| | |
|---|---|
| (i) மா.நி.ஒ. 64 மற்றும் 64(2)(2)(அ) | சுகாதாரத் திணைக்களத்தால் 2011 ஆம் ஆண்டுக்காக 2012 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 1,571,486 காலங்கடந்த கொடுப்பனவிற்காக சான்றிதழ் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

(ii) மா.நி.ஒ. 169.1

03 பிரதேச செயலகங்களால் 21 சந்தர்ப்பங்களில் ரூபா 5,663,197 பெறுமதியான கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் சான்றுறுதிப்படுத்தப்படாது கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(iii) மா.நி.ஒ. 471(1)

05 சந்தர்ப்பங்களில் நாரம்பனாவ வைத்தியசாலைக்கு கிடைத்திருந்த 68 மருந்து வகைகள், தித்தபஜ்ஜல பர்யன்த வைத்தியசாலைக்கு 07 சந்தர்ப்பங்களில் கிடைத்திருந்த 20 நுகர்வுப் பொருள் விடயங்கள் மற்றும் 04 சந்தர்ப்பங்களில் கிடைத்திருந்த 14 மருந்துப் பொருள் வகைகள் விடயங்கள் இருப்புப் புத்தகங்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) தாபன விதிக்கோவை

(i) XII ஆம் அத்தியாயத்தின் 14.2 மற்றும் 14.4 ஆம் பிரிவு

தற்காலிக அடிப்படையில் சேவையில் ஈடுபடுத்தப் படுகின்ற நபர்களிற்கு முழுமையான சம்பளத்துடன் கல்வி விடுமுறைகளைப் பெற்றுக்கொள்வதற்கு உரித்துக் காணப்படாத போதிலும், மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு ஒரு வருடத்திற்காக ஒப்பந்த அடிப்படையில் சேவையில் ஈடுபடுத்தப் பட்டிருந்த நபரிற்கு சம்பளத்துடன் கல்வி விடுமுறை வழங்கப்பட்டு ஒப்பந்த முகாமைத்துவ பயிற்சிப் பாடநெறிக் கட்டணமாக ரூபா 50,000 செலுத்தப் பட்டிருந்தது.

(ii) XIV ஆம் அத்தியாயத்தின் 8 ஆம் பிரிவு

கைத்தொழில் அமைச்சினால் செயற்படுத்தப்பட்டிருந்த செயற்திட்டமொன்று தொடர்பில் 09 சந்தர்ப்பங்களில் வளவாளராக பங்குபற்றியிருந்த ஒருவருக்கு மைல் கூலி கொடுப்பனவைக் கருத்திற் கொள்ளாது 09 நாட்களிற்காக போக்குவரத்துச் செலவினமாக ரூபா 72,000 செலுத்தப்பட்டிருந்தது.

(iii) XIX ஆம் அத்தியாயத்தின் 5 ஆம் பிரிவு

விவசாயத் திணைக்களத்திற்குச் சொந்தமான அரசாங்க வதிவிடங்களில் குடியிருக்கும் 05

நபர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 35,656 வதிவிட வாடகை மாகாண சபையால் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(iv) XIX ஆம் அத்தியாயத்தின் 5.8 ஆம் பிரிவு

அரசாங்க இல்லங்களில் குடியிருக்கும் உத்தியோகத்தர்கள் பயன்படுத்தும் நீர் மற்றும் மின்சாரம் என்பவற்றிகான கட்டணங்கள் குடியிருக்கும் உத்தியோகத்தர்களினால் மாத்திரம் செலுத்தப்பட வேண்டிய போதிலும், தொலஸ்பாகே வைத்தியசாலையின் தாதியர் இல்லத்தின் 2010 சனவரி முதல் 2012 ஒக்தோபர் வரையான ரூபா 160,548 மின்சாரப் பட்டியல்கள் இல்லங்களில் குடியிருப்போர்களிடமிருந்து அறவிடப்படாது சுகாதாரத் திணைக்களத்தினால் செலுத்தப்பட்டிருந்தது.

(v) XIX ஆம் அத்தியாயத்தின் 5.2.1 ஆம் உப பிரிவு

நுவரெலியா சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்திற்குரிய பட்டியலிடப்பட்ட இல்லங்கள் என எழுத்துமூலச் சான்றுகள் சமர்ப்பிக்கப்படாத 07 அரசாங்க இல்லங்களிலிருந்து பட்டியலிடப்பட்ட இல்லங்களாகக் கருதப்பட்டு திருமணமான உத்தியோகத்தர்களின் சம்பளங்களிலிருந்து 10 சதவீதமும் திருமணமாகாத உத்தியோகத்தர்களின் சம்பளங்களிலிருந்து 5 சதவீதமும் ஆக உரிய வாடகையிலும் குறைவாக ரூபா 198,467 அறவிடப்பட்டிருந்தது.

(உ) சுற்றிக்கைகள்

பொது நிர்வாகச் சுற்றறிக்கை

* 1994 யூலை 01 ஆம் திகதிய 24/94 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 2 ஆம் பிரிவு மற்றும் 2001 சனவரி 15 ஆம் திகதிய 01/2001 ஆம் இலக்க ஓய்வூதியச் சுற்றறிக்கையின் 2 ஆம் பந்தி

சேகரிக்கப்படும் விதவை அநாதைகள் ஓய்வூதிய பங்களிப்புத் தொகை, அடுத்த மாதத்தின் 05 ஆம் திகதிக்கு முன்னர் நிதியத்திற்கு அனுப்பப்பட வேண்டிய போதிலும், 2010 முதல் 2012 ஆம் ஆண்டின் இறுதி வரை அறவிடப்பட்ட ரூபா 1,459,872,806 ஆன பங்களிப்புத் தொகை அவ்வாறு அனுப்பப்படாமல் இருந்தது.

| | |
|---|---|
| * 2008 யூன் 26 ஆம் திகதிய 13/2008 ஆம் இலக்க மற்றும் 2011 பெப்ரவரி 09 ஆந் திகதிய 13/2008(iv) ஆம் இலக்க சுற்றறிக்கைகள் | அலுவலகத் தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக உத்தியோகபூர்வ வாகனங்களிற்கு எரிபொருள் எல்லைகள் வழங்கப்பட்டிருந்த போதிலும், அந்த எல்லைகளை மீறி அங்கீகாரமின்றி விவசாய அமைச்சுச் செயலாளரினால் கட்டளைகளின் மூலம் ரூபா 585,602 பெறுமதியான 4410 லீற்றர் எரிபொருளும் சுகாதார அமைச்சுச் செயலாளரினால் 23 சந்தர்ப்பங்களில் ரூபா 118,806 பெறுமதியான எரிபொருளும் கண்டி சுகாதார சேவைகள் பணிப்பாளரினால் ரூபா 144,934 பெறுமதியான 1399 லீற்றர் எரிபொருளும் பெறப்பட்டிருந்தன. |
| * 1999 ஒக்தோபர் 08 ஆம் திகதிய 22/99 ஆம் இலக்க சுற்றறிக்கை | கண்டி மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தின் கணக்காளர் (III ஆம் தரம்) ஒதுக்கப்பட்ட வாகனத்திற்கு உரித்தற்றவராக காணப்பட்ட போதிலும், அரசாங்க வாகனமொன்றைப் பயன்படுத்தி 2012 சனவரி முதல் ஆகஸ்ட் வரை ரூபா 434,584 பெறுமதியான 2957 லீற்றர் எரிபொருள் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. |

(ii) சனாதிபதிச் செயலாளரின் சுற்றறிக்கை

-------------------------------------------

| | |
|---|---|
| * 2006 பெப்ரவரி 10 ஆம் திகதிய CSA/1/1/2006 ஆம் இலக்க சுற்றறிக்கை | அரசாங்கத்துடன் தொடர்புடைய நபர்களினால் மேற்கொள்ளப்படுகின்ற சகல உத்தியோகபூர்வ வெளிநாட்டுப் பயணங்களிருந்தும் நாட்டிற்கு ஏதேனும் நலன் கிடைக்க வேண்டுமென்றும் இந்த அடிப்படை கொள்கையின் படி எந்த வகையிலுமான வெளிநாட்டுப் பயணமொன்றிற்காவும் கட்டாயமாக பலமான ஏற்றுக் கொள்ளப்படத்தக்க காரணமொன்று இருத்தல் வேண்டுமென்றும் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், அதற்கு முரணாக மத்திய மாகாணத்தின் உறுப்பினர்கள் 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளில் இந்தியா, வியட்னாம் போன்ற நாடுகளிற்கு |

சுற்றுலாக்களை மேற்கொண்டிருந்த விதத்திலேயே 2012 ஆம் ஆண்டிலும் 7 நாட்கள் வீதம் 3 சந்தர்ப்பங்களில் சீனாவிற்குச் செல்வதற்காக செயலாளர் அடங்கலாக 62 உறுப்பினர்களிற்காக ரூபா 17,083,778 செலவிடப்பட்டிருந்தது.

| | |
|---|---|
| * 1993 திசெம்பர் 31 ஆம் திகதிய PPA/6/1/1 ஆம் இலக்க மற்றும் 2010 யூலை 09 ஆம் திகதிய CA/1/1/16/1 ஆம் இலக்க சுற்றறிக்கைகள் | வெளிநாட்டில் உத்தியோகபூர்வ பயணத்தை மேற்கொண்டு நாடுதிரும்பிய பின்னர் 07 நாட்களினுள் பயணம் தொடர்பிலான முழுமையான விடயங்களை உள்ளடக்கிய அறிக்கையொன்று வெளிநாட்டுப் பயணத்தை அங்கீகரித்த உத்தியோகத்தருக்கு வழங்க வேண்டிய போதிலும், சீன சுற்றுலா முடிவுற்று 2013 ஏப்ரல் 30 ஆந் திகதிக்கு ஏறத்தாழ 04 மாதங்கள் கடந்திருந்த போதிலும் அவ்வாறான அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

(iii) தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கை

| | |
|---|---|
| * 2012 பெப்ரவரி 16 ஆம் திகதிய 156 ஆம் இலக்க சுற்றறிக்கை | அழைப்பிதழ்கள், தினப்பதிவேடுகள், வாழ்த்து மடல்கள் போன்ற அத்தியாவசியமற்ற செயற்பாடுகளுக்காக மேற்கொள்ளப்படுகின்ற செலவுகளை மட்டுப்படுத்த வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டுள்ள போதிலும், அதற்கு முரணாக பேரவைச் செயலகத்தினால் 04 சந்தர்ப்பங்களில் ரூபா 427,500 தொகை செலவில் வாழ்த்து மடல்களும் தினப்பதிவேடுகளும் அச்சிடப்பட்டிருந்தன. |

(iv) ஏனைய சுற்றறிக்கைகள்

| | |
|---|---|
| * 2009 ஒக்தோபர் 30 ஆந் திகதிய மத்திய மாகாண பிரதான அமைச்சரின் கடிதம் | மேற்பார்வை உறுப்பினர்களால் தமது பயணச் செலவுகளைக் கோருகையில் மேற்பார்வை நடவடிக்கைகளுடன் தொடர்புடைய அறிக்கையொன்று உரிய படிவத்தில் தயாரிக்கப்பட்டு அமைச்சிற்கு கையளிக்கப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு நடவடிக்கை மேற்கொள்ளாது சுகாதார அமைச்சின் 05 உறுப்பினர்களால் 2012 ஆம் ஆண்டில் ரூபா 655,567 பிரயாணச் செலவும் படிகளும் பெறப்பட்டிருந்ததுடன், |

மேலும் 04 மேற்பார்வை உறுப்பினர்களால் வைத்தியசாலை மேற்பார்வை நடவடிக்கைகளிற்காக பெற்றுக்கொண்டிருந்த பயணச் செலவினத்திற்காக பொய்யான தூரங்கள் குறிப்பிடப்பட்டு மீளாய்வாண்டில் ரூபா 102,718 தொகை மேலதிகமாகப் பெறப்பட்டிருந்தது.

| | |
|---|---|
| * 2010 மே 25 ஆந் திகதிய 4/2010 ஆம் இலக்க ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகத்தின் சுற்றறிக்கை | பண்ணையில் சேவையாற்றும் 10 ஊழியர்களுக்கு 2012 சனவரி முதல் 2012 திசெம்பர் வரை சம்பளமாக ரூபா 1,257,250 செலுத்தப்பட்டிருந்த போதிலும், அது தொடர்பில் அரசாங்க சேவைகள் சேமலாப நிதியத்திற்கான தொழில்தருனர், ஊழியர் பங்களிப்பாக ரூபா 251,450 தொகையை நிதியத்திற்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| * 2011 மார்ச் 27 ஆந் திகதிய உள்நாட்டு இறைவரி ஆணையாளரின் IRD/PAYB/RA/GE/01 ஆம் இலக்க கடிதம் | மாதாந்தம் ரூபா 50,000 இற்கு மேல் சம்பளம் பெறுகின்ற சுகாதாரத் திணைக்களத்தின் 154 வைத்தியர்களிடமிருந்து 2011 யூலை முதல் திசெம்பர் வரையான கால எல்லைக்காக ரூபா 1,009,432 உழைக்கும் போதே செலுத்தும் வரிகள் கணிக்கப்பட்டு உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பி வைத்திருக்கவில்லை. |

## 2. வருமான முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வருமான நிர்வாகம்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த கணக்குகளின் பிரகாரம், கடந்த 03 ஆண்டுகளில் சேகரிக்கப்பட்ட வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | திசெம்பர் 31 இல் உள்ளவாறான | | |
|---|---|---|---|
| | **2010** | **2011** | **2012** |
| | **ரூபா** | **ரூபா** | **ரூபா** |
| வரி வருமானம் | 2,668,851,691 | 3,685,121,035 | 3,852,936,300 |
| வரியல்லாத வருமானம் | 332,880,166 | 941,317,077 | 1,002,353,327 |
| மொத்தம் | 3,001,731,857 | 4,626,438,112 | 4,855,289,627 |

(ஆ) அம்பகமுவ பிரதேச செயலகத்திற்கு உரித்தான திக்ஓய கிராம சேவகர் பிரிவில் தனியார் கம்பனியொன்றால் 960 கிலோ வொட்ஸ் இயலளவுடையதாக நிர்மாணிக்கப்பட்டிருந்த சிற்றளவு நீர் மின்சார நிலையத்திற்காக உடன்படிக்கையின் பிரகாரம் 2011, 2012 மற்றும் 2013 ஆகிய 03 ஆண்டுகளிற்காக நீர் திருப்புதல் வரியாக அறவிடப்பட வேண்டிய ரூபா 316,800 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2012 திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக மாகாண சபை நிதியத்தில் ரூபா 774,945,578 பற்றாக்குறை காணப்பட்டதுடன், அதற்கு மாறாக முன்னைய ஆண்டின் மிகை ரூபா 1,114,308,964 ஆக இருந்தது. இதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 1,889,254,542 வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீண்டெழும் செலவினம் ரூபா 1,073,516,625 ஆல் அதிகரித்திருந்தமை மற்றும் மூலதனச் செலவினம் ரூபா 547,543,613 ஆல் மீளாய்வாண்டில் அதிகரித்திருந்தமை இந்த வீழ்ச்சிக்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தன.

### 3.2 வருமானங்களும் செலவுகளும்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கும் முன்னைய ஆண்டிற்குமான வருமானங்கள் மற்றும் செலவுகள் தொடர்பான பொழிப்பு கீழே தரப்படுகின்றது.

திசெம்பர் 31 இல் உள்ளவாறான வருமானம்

| | 2012 | | | 2011 | | |
|---|---|---|---|---|---|---|
| | பாதிடப் பட்டவை | உள்ளபடி யானவை | முரண் | பாதிடப் பட்டவை | உள்ளபடி யானவை | முரண் |
| | ரூபா மில். | ரூபா மில். | ரூபா மில். | ரூபா மில். | ரூபா மில். | ரூபா மில். |
| மாகாண சபை விடயங்களுக்குரிய வருமானம் | | | | | | |
| வரி வருமானம் | 4,612 | 3,853 | 759 | 3,325 | 3,685 | (360) |
| வரியல்லாத வருமானம் | 428 | 1,002 | (574) | 325 | 941 | (616) |
| | 5,040 | 4,855 | 185 | 3,650 | 4,626 | (976) |
| அரசாங்க மானியம் | 17,311 | 15,532 | 1,779 | 17,948 | 16,029 | 1,919 |
| மொத்தம் | 22,351 | 20,387 | 1,964 | 21,598 | 20,655 | 943 |

திசெம்பர் 31 இல் உள்ளவாறான செலவுகள்

| மீண்டுவரும் செலவினம் | 2012 பாதிடப் பட்டவை ரூபா மில். | 2012 உள்ள படியானவை ரூபா மில். | 2012 முரண் ரூபா மில். | 2011 பாதிடப் பட்டவை ரூபா மில். | 2011 உள்ள படியானவை ரூபா மில். | 2011 முரண் ரூபா மில். |
|---|---|---|---|---|---|---|
| ஆளணி வேதனம் | 15,157 | 14,752 | 405 | 14,156 | 14,128 | 28 |
| ஏனையவை | 3,982 | 3,248 | 734 | 2,871 | 2,799 | 72 |
| உப கூட்டுத்தொகை | 19,139 | 18,000 | 1,139 | 17,027 | 16,927 | 100 |
| மூலதன செலவினம் | 3,764 | 3,162 | 602 | 4,571 | 2,614 | 1,957 |
| மொத்தம் | 22,903 | 21,162 | 1,741 | 21,598 | 19,541 | 20,057 |

மீளாய்வாண்டிற்கான மொத்தச் செலவினத்தில் 85 சதவீதம் மீண்டுவரும் செலவினமாக இருந்ததுடன், 15 சதவீதம் மூலதனச் செலவினமாக இருந்தது

### 3.3 முற்பணக் கணக்குகளின் எல்லைகளைப் பின்பற்றாமை

இலங்கை குடியரசின் நிதிப்பிரமாணம் 503 மற்றும் மத்திய மாகாண சபையின் நிதி ஒழுங்குவிதி 367.1 இலுள்ள ஏற்பாடுகளுக்கு முரணாக அரசாங்க உத்தியோகத்தர் முற்பணக் கணக்கின் விடய இல. 02 இலுள்ள செலவினத்திற்கான ஆகக்கூடிய எல்லை ரூபா 556,418 ஆல் மிகைத்திருந்தமையால் ஒரு கணக்கு விடயத்தின் பெறுவனவுகளின் ஆகக்குறைந்த எல்லை ரூபா 954,338 ஆல் அணுகப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே புடவைக் கைத்தொழில் திணைக்களத்தின் வர்த்தக முற்பணக் கணக்கின் செலவினத்திற்கான ஆகக்கூடிய எல்லை ரூபா 32,416,556 ஆல் மிகைத்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 அரசாங்க மானியம்

மாகாண சபை அபிவிருத்தி வேலைத்திட்டங்களுக்காக பெற்றுக்கொள்ளப்பட்ட ஏற்பாடுகள் மற்றும் செலவு செய்தல்கள் தொடர்பான விபரம் கீழே தரப்படுகின்றன.

| | மூலம் | அரசிடமிருந்தான மானியங்கள் பெறுவனவு | உள்ளபடியான செலவினம் |
|---|---|---|---|
| | ------------------------ | ---------------------- | ---------------------- |
| | | ரூபா மில். | ரூபா மில். |
| (i) | கருதுகோள் அடிப்படை மானியம் | 218 | 313 |
| (ii) | மாகாண குறித்துரைத்த அபிவிருத்தி மானியம் | 1,729 | 2,416 |
| (iii) | திரண்ட மானியம் | 13,049 | 18,000 |
| (iv) | ஏனைய மானியம் | 536 | 433 |
| | | ------------ | ------------- |
| | | 15,532 | 21,162 |
| | | ======= | ======== |

## 4.2 செயற்பாட்டு செயற்திறனின்மை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2012 ஆம் ஆண்டில் மத்திய மாகாண சுகாதார திணைக்களத்தினால் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 3,832,375 பெறுமதியான பல்வேறு வகைகளைச் சார்ந்த 04 மருத்துவ உபகரணங்கள் தம்புள்ள, மாத்தளை மற்றும் திகன வைத்தியசாலைகளுக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும், அவை கொள்வனவு செய்யப்பட்ட திகதியிலிருந்தே விளைவற்றுக் காணப்பட்டமையால் பயன்படுத்த முடியாத நிலையில் இருந்தன.

(ஆ) மொரயாய, சீகிரிய, தித்தபஜ்ஜல மற்றும் தொலஸ்பாகே வைத்தியசாலைகளில் ரூபா 127,324 பெறுமதியான மருந்துகள் காலாவதியாகியிருந்தன.

(இ) 2009 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் மாத்தளை மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தின் களஞ்சியத்திற்குக் கிடைத்திருந்த ரூபா 1,346,155 பெறுமதியான 12 மருந்து வகைகள் கொழும்பு மருத்துவ வழங்கல் பிரிவினால் தரக் குறைவானவை என பரிந்துரைக்கப்பட்டிருந்தமையால் அவற்றை திருப்பி அனுப்பாது அல்லது பொருத்தமான நடவடிக்கையினை மேற்கொள்ளாது களஞ்சியத்தில் வைத்திருக்கப்பட்டது.

(ஈ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு விடுதி வசதிகளை வழங்குவதற்காக மீளாய்வாண்டில் வரையறுக்கப்பட்ட ஹஸலக பல்நோக்குக் கூட்டுறவுச் சங்கக் கட்டிடத்தின் மேல் மாடியினை அபிவிருத்தி செய்வதற்காக ரூபா 500,000 செலவிடப்பட்டிருந்த போதிலும், கணக்காய்வுத் திகதியான 2013 பெப்ரவரி 18

ஆந் திகதி வரை அக்கட்டிடம் குறித்த நோக்கத்திற்காகப் பயன்படுத்தப் பட்டிருக்கவில்லை.

## 4.3 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பொல்கொல்ல தேசிய கூட்டுறவுச் சங்க நிறுவனத்தினால் கூட்டுறவுச் சங்கங்களில் பணிபுரியும் உத்தியோகத்தர்களுக்காக 2012 திசெம்பர் 22 ஆந் திகதி முதல் ஆரம்பிக்கப்பட்டிருந்த தொழில்சார் முகாமைத்துவத் திறன் அபிவிருத்தி சான்றிதழ் பாடநெறிக்காக 106 விண்ணப்பதாரிகளுக்கான பாடநெறிக் கட்டணமாக ரூபா 300,000 செலுத்தப்பட்டிருந்தது. இருப்பினும், குறித்த பாடநெறிக்கு 46 நபர்கள் மாத்திரம் பங்குபற்றியிருந்தனர். பங்குபற்றியிருக்காத 60 நபர்களிற்காக கூட்டுறவு நிதியத்திலிருந்து ரூபா 156,250 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) பிரதம அமைச்சினால் 11 பக்கங்களுடன் கூடிய ‘‘மெதரட உதாவ’’ சஞ்சிகையின் 225 பிரதிகளை பிரதியொன்று ரூபா 1,658 வீதம் அச்சிடுவதற்காக பதிவுசெய்யப்பட்டிருக்காத வழங்குனர் ஒருவருக்கு ரூபா 373,000 செலுத்தப்பட்டிருந்தது. இச் சஞ்சிகையினை மேற்படி கிரயத்தில் அந்த நிறுவனத்திடமே அச்சிட்டுக் கொள்வதற்காக கணக்காய்வினால் பெற்றுக் கொள்ளப்பட்ட விமைனுக் கோரலின் படி, ஒன்று ரூபா 394 வீதம் அச்சிட்டுக் கொள்வதற்கு முடியுமாக இருந்தமை வெளிப்பட்டிருந்தமையால் அதற்காக ரூபா 284,250 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(இ) 06 வைத்தியசாலைகளில் திருத்தப்பட வேண்டிய உபகரணங்களின் திருத்தல் தன்மைகளை இனங்கண்டு கொள்ளாது வைத்தியசாலைக் கட்டில்கள், ரொலி, சேலையின் பொருத்திகள், லொகர் போன்ற உபகரணங்கள் ஒரே வகையைச் சார்ந்தவை எனக் கருதப்பட்டு வர்ணம் பூசப்பட வேண்டிய மேற்பரப்பு தொடர்பில் கருத்திற்கொள்ளப்படாது ரூபா 6,053,310 தொகை செலுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பில் மாவட்டப் பொறியியலாளரினால் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப் பட்டிருந்த அறிக்கையின் படி அது தொடர்பில் ரூபா 1,407,313 நிதிசார் நட்டம் ஏற்பட்டிருந்தமை வெளிப்பட்டது.

## 4.4 வெளிப்படையான மோசடிகள்

மத்திய மாகாண பயணிகள் போக்குவரத்துச் சேவைகள் அதிகாரசபையின் தலைவரது உத்தியோகபூர்வ வாகனத்தினை திருத்துவதற்கு உட்படுத்தப்பட்டிருந்த 45

நாட்களிற்காக நாளொன்றிற்கு ரூபா 5,000 வீதம் போக்குவரத்து வாடகையாக ரூபா 225,000 தொகை தலைவரின் தனிப்பட்ட பெயருக்குச் செலுத்தப்பட்டிருந்தது. இருப்பினும் அக்காலப்பகுதியினுள் 07 சந்தர்ப்பங்களில் பயணித்திருந்த தூரத்தின் அளவு 18296 கி.மீ. மாத்திரமேயாகும். இருப்பினும், அவ்வாறான வாகனமொன்று பயன்படுத்தப் பட்டிருந்தமைக்கான விலைமனுக் கோரல் கடிதங்களோ ஓட்டப்பதிவேடுகளோ சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.5 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) அதிகாரசபையால் மத்திய மாகாண பயணிகள் போக்குவரத்து சேவைகள் நியதிச் சட்டத்தினை திருத்துவதற்காக தனியார் சட்டச் சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்கு எவ்வித உடன்படிக்கையுமின்றி ரூபா 350,000 தொகை 2007 ஆம் ஆண்டில் செலுத்தப்பட்டு 06 ஆண்டுகள் கடந்திருந்த போதிலும், அந் நியதிச்சட்டத்தினை திருத்த முடியாது போயிருந்தது. அதற்காக மீளாய்வாண்டில் ரூபா 46,696 செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) வலப்பனை மாவட்ட வைத்தியசாலையின் பக்கவாத நோயாளர் பிரிவு தாபிக்கப்பட்டிருக்காத போதிலும் அதன் பௌதீக கதிரியக்கப் பிரிவிற்காக 2011 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டிருந்த ரூபா 1,549,211 பெறுமதியான 04 சத்திரசிகிச்சை உபகரணங்கள் கணக்காய்வுத் திகதியான 2013 மே 17 ஆந் திகதி வரை களஞ்சியத்தில் வைத்திருக்கப்பட்டிருந்ததுடன் அதன் உத்தரவாதக் காலமும் முடிவடைந்திருந்தது.

(இ) மத்திய மாகாண சபையின் நிர்வாகக் கட்டிடத் தொகுதியினை நிர்மாணிப்பதற்கான நிர்மாண நடவடிக்கைகள் உடன்படிக்கைக் கால எல்லைக்குள் பூரணப்படுத்தப்பட்டிருக்காமை காரணமாக அதன் மதியுரைச் சேவை நிறுவனத்திற்காக மீளாய்வாண்டில் ரூபா 1,934,711 மேலலதிக் கட்டணம் செலுத்த வேண்டி ஏற்பட்டிருந்தது.

(ஈ) கலேவல வலயக் கல்வி அலுவலகத்திற்குரிய மா/க/பம்பாவ ஆரம்பப் பாடசாலைக்கு 2010 பெப்ரவரி 05 ஆந் திகதி முதல் கல்வி கற்பதற்கு எந்தவொரு மாணவரும் வருகை தராதிருக்கையில் 2010 பெப்ரவரி 05 முதல் 2012 மே 31 ஆந் திகதி வரை அங்கு சேவையாற்றிய அதிபர் ஓய்வுபெற்றுச் செல்லும் வரை அவருக்குச் சம்பளமாக ரூபா 682,893 தொகையும், 2013

பெப்ரவரி 28 ஆந் திகதி சமூகமளித்திருந்த புதிய அதிபருக்கு 2013 மார்ச் மாதத்திற்காக ரூபா 29,410 சம்பளமுமாக ரூபா 712,303 சம்பளம் எவ்வித கடமையும் ஆற்றாது செலுத்தப்பட்டிருந்தது.

## 4.6 இனங்காணப்பட்ட நட்டங்களும் சேதங்களும்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போதும் நிறுவனத்தில் பேணப்பட்ட தகவல்களின் பிரகாரமும் கீழே காட்டப்பட்டுள்ள நட்டங்களும் சேதங்களும் வெளிப்படுத்தப்பட்டன.

(அ) மாகாண சபைக்குச் சொந்தமான அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களின் கீழுள்ள ஆதனங்களிற்கு 16 சந்தர்ப்பங்களில் ஏற்பட்டிருந்த ரூபா 31,927,853 பெறுமதியான நட்டச் சேதங்கள் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டு பொருத்தமான நடவடிக்கைகளை எடுப்பதற்கு பல ஆண்டுகளாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கல்வித் திணைக்களத்தின் 3 நிகழ்ச்சித்திட்டங்களுக்கு 175 சந்தர்ப்பங்களில் ஏற்பட்டிருந்த ரூபா 18,122,102 நட்ட இழப்புக்கள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு உரிய முறையில் அறவிட்டுக் கொள்வதற்கோ அல்லது புத்தகங்களிலிருந்து பதிவழிப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே 5 ஆண்டுகளைக் கடந்திருந்த 73 சந்தர்ப்பங்களுக்குரிய நட்ட இழப்புக்களின் பெறுமதி ரூபா 9,449,194 ஆக காணப்பட்டதுடன் 01 முதல் 05 ஆண்டுகளிற்கு இடைப்பட்ட 102 சந்தர்ப்பங்களுக்குரிய நட்ட இழப்புக்களின் பெறுமதி ரூபா 8,672,909 ஆகக் காணப்பட்ட போதிலும் அந்நட்ட இழப்புக்களை அறவிட்டுக் கொள்வதற்கோ அல்லது புத்தகங்களிலிருந்து பதிவழிப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) கல்பாலம பண்ணையில் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 69,612 பெறுமதியான காலாவதியான 16 விவசாய இரசாயண விடயங்களும் ரூபா 23,250 பெறுமதியான 03 ஹொன்டர் விதை உருளைக்கிழங்கும் குறைவாகக் காணப்பட்டன.

(ஈ) கண்டி, மாத்தளை மற்றும் நுவரெலியா சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகங்களுக்குச் சொந்தமான 23 வாகனங்களுக்கு ஏற்பட்டிருந்த விபத்துக்கள் தொடர்பில் ரூபா 4,907,337 ஆன நட்டத்தினை அறவிட்டுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**4.7 ஒப்பந்த நிர்வாகம்**

மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் மடகும்புர மேதகம வீதியினை (II ஆம் கட்டம்) மேம்படுத்துவதற்காக ரூபா 24,873,483 இற்கு உடன்படிக்கையொன்றில் கைச்சாத்திட்டிருந்த போதிலும், அது தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட பௌதீகப் பரிசோதனையில் வீதி உரிய தரத்தில் நிர்மாணிக்கப்படாதிருக்கையில் ரூபா 22,399,722 செலுத்தப்பட்டிருந்தது.

**4.8 தாமதமடைந்த செயற்திட்டங்கள்**

மத்திய மாகாணத்தினுள் பரவிக் காணப்படுகின்ற மறைந்து செல்கின்ற பொருளாதார மற்றும் சமூக கலாச்சார மரபுரிமைகள் தொடர்பில் தகவல்களைச் சேகரித்து நூலொன்றை உருவாக்கி எதிர்காலச் சந்ததியினருக்காக பாதுகாத்து வைக்கும் நோக்குடன் மேல்நாட்டு வம்சக் கதைகள் என்ற பெயரில் நுலொன்றை படைப்பதற்காக கலாச்சாரத் திணைக்களத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. அதன் படி 2011 ஆம் ஆண்டில் ரூபா 760,858 தொகையும் 2012 ஆம் ஆண்டில் 58 கட்டுரைகளை தயாரிப்பதற்காக ரூபா 567,688 தொகையுமாக ரூபா 1,328,546 கூட்டுத் தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரைக்கும் குறித்த நோக்கம் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

**4.9 முறைப்படியாக கையேற்கப்படாத காணிகள்/ஆதனங்களில் செயற்திட்டங்களை ஆரம்பித்தல்**

ஹங்குரன்கெத கல்வி வலயத்திலுள்ள 69 பாடசாலைக்கு உரித்தான காணிகள் தொடர்பில் சட்டரீதியான உரித்தினை உறுதிப்படுத்திக் கொள்வதற்குத் தேவையான உறுத்துறுதிகளைப் பெற்றுக்கொள்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**4.10 ஏனைய அரசாங்க நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட வளங்கள்/ வெளி நபர்களுக்குச் சொந்தமான வளங்கள்**

**4.10.1 ஏனைய நிறுவனங்களுக்கு விடுவிக்கப்பட்ட பௌதீக வளங்கள்**

நிறுவனத்தின் பயன்பாட்டிற்காக இருந்த பௌதீக வளங்கள் ஏனைய தரப்பினர்களுக்கு வழங்கப்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் தெரிவுப் பரிசோதனைகளில் அவதானிக்கப்பட்டன. விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

(அ) பிரதான அமைச்சினால் சுற்றுலாத் திணைக்களம், தும்பனே பிரதேச சபை, தம்புள்ள நகர சபை, வலயப் பொருளாதார அபிவிருத்தி நிலையம் மற்றும்

கல்வித் திணைக்களத்திற்கு 05 வாகனங்கள் விடுவிக்கப்பட்டு ஓராண்டு காலம் கடந்திருந்தது.

(ஆ) கல்வித் திணைக்களத்திற்குச் சொந்தமான நுவரெலியாவில் உள்ள சுற்றுலா விடுதி 2006 ஆம் ஆண்டு முதல் போக்குவரத்து அமைச்சின் அலுவலகத்திற்காகவும், கண்டி தர்மாசோக மாவத்தையிலுள்ள அப்லண்டிஸ் இல் தாபிக்கப்பட்டுள்ள அரசாங்க வதிவிடம் 2010 ஆம் ஆண்டு முதல் பிரதான அமைச்சின் ஒருங்கிணைப்புச் செயலாளருக்கும் வழங்கப்பட்டிருந்தன.

### 4.10.2 ஏனைய நிறுவனங்களுக்கு விடுவிக்கப்பட்ட மனித வளங்கள்

தெரிவுப் பரிசோதனைகளில் வெளிப்பட்டவாறு ஏனைய நிறுவனங்களிலிருந்து பெறப்பட்ட மற்றும் அவற்றிற்கு விடுவிக்கப்பட்ட மனித வளங்கள் தொடர்பான விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

(அ) மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு இணைப்புச் செய்யப்பட்டிருந்த மாகாண வீடமைப்புத் திணைக்களத்திற்குச் சொந்தமான இரண்டு உத்தியோகத்தர்களுக்கு 2011 ஆகஸ்ட் முதல் 2012 செப்தெம்பர் வரை திணைக்களத்தினால் ரூபா 1,071,271 சம்பளம் செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) புடவைக் கைத்தொழில் திணைக்களத்திற்கு உரித்தான பாதுகாவலர் ஒருவர் முறையான விடுவித்தலின்றி கிராமிய அபிவிருத்தித் திணைக்களத்தின் சேவைக்காக 2012 ஆம் ஆண்டில் ஈடுபடுத்தப்பட்டு புடவைக் கைத்தொழில் திணைக்களத்தினால் ரூபா 345,680 சம்பளம் செலுத்தப்பட்டிருந்தது.

(இ) மத்திய மாகாண கலாச்சாரத் திணைக்களத்தின் கீழ் சம்பளம் பெறுகின்ற நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் ஒருவர் 2009 திசெம்பர் 24 ஆந் திகதியிலிருந்து தலதா மாளிகையின் தியவடன நிலமே அவர்களின் உத்தியோகபூர்வ கடமைகளிற்காக இணைப்புச் செய்யப்பட்டிருந்தார். திணைக்களத்திற்கு அவரிடமிருந்து எச் சேவையும் கிடைக்கப் பெறாதிருக்கையிலும் 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் அவருக்கு சம்பளமாக ரூபா 575,416 மொத்தத்தொகை செலுத்தப்பட்டிருந்தது.

### 4.10.3 ஏனைய நிறுவனங்களிலிருந்து பெறப்பட்ட மனித வளங்கள்

பிரதான அமைச்சின் 2012 ஆம் ஆண்டிற்கான அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான ஊழியர் கோப்பின் மீதான பரிசோதனையில் 2 தொடக்கம் 8

ஆண்டுகள் வரையான காலத்திலிருந்து அங்கீகரிக்கப்பட்ட பதவியணிக்குப் புறம்பாக பல்வேறு திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்கள் கீழ் சம்பளம் பெறுகின்ற 08 உத்தியோகத்தர்களின் சேவை பெறப்பட்டிருந்தது.

## 4.11 அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியணியினர் எண்ணிக்கை

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மத்திய மாகாண சபையின் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியணியினர் எண்ணிக்கை தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

### (அ) மாகாண சபை அமைச்சுக்கள்/ திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்கள்

| | அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை | உள்ளபடியான எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| சிரேஷ்ட நிலை | 1,484 | 1,458 | 26 |
| மூன்றாம் நிலை | 2,180 | 1,507 | 673 |
| இரண்டாம் நிலை | 35,495 | 32,385 | 3,110 |
| ஆரம்ப நிலை | 4,396 | 3,865 | 531 |
| | 43,555 | 39,215 | 4,340 |

### (ஆ) பாடசாலை பதவியணியினர்

| | அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை | உள்ளபடியான எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகையான எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| அதிபர்கள் | 1,638 | 1,232 | 406 | - |
| ஆசிரியர்கள் | 23,754 | 26,956 | - | 3,202 |
| சிற்றூழியர்கள் | 2,057 | 523 | 1,534 | - |
| | 27,449 | 28,711 | 1,940 | 3,202 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(i) 2012 திசெம்பர் 31 அளவில் ஹங்குரன்கெத மற்றும் மாத்தளை ஆகிய வலயக் கல்வி அலுவலகங்களில் முறையே 242 மற்றும் 84 ஆசிரிய மிகையும்,

கொத்மலை மற்றும் மாத்தளை ஆகிய வலயங்களில் முறையே 208 மற்றும் 89 ஆசிரிய வெற்றிடங்களும் காணப்பட்டன.

(ii) இலங்கை ஆசிரியர் சேவைக்குரிய ஆசிரியர்களால் கண்டியில் 32 பேரும், நுவரெலியாவில் 51 பேரும், ஹங்குரன்கெத்தையில் 24 பேரும், ஹட்டனில் 48 பேரும், கொத்மலையில் 13 பேருமாக வலயக் கல்வி அலுவலகத்திற்குச் சொந்தமான 168 பாடசாலைகளில் நிலவிய அதிபர் வெற்றிடங்களில் 07 ஆண்டுகளிற்கும் மேற்பட்ட காலமாக பதிற்கடமையாற்றி வந்திருந்த போதிலும் அவ் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.1.2 வாகனப் பயன்பாடு

வட மத்திய மாகாணத்திற்கு உரித்தான பொலன்னறுவை வலயக் கல்வி அலுவலகத்தில் சேவையாற்றும் சாரதி ஒருவர் மத்திய மாகாணத்திற்குச் சொந்தமான வாகனமொன்றைச் செலுத்துகையில் இடம்பெற்றிருந்த விபத்து தொடர்பில் மாவட்ட நீதிமன்றத்தில் தொடரப்பட்டிருந்த வழக்குத் தீர்ப்பின் படி சேதத்திற்குள்ளாக்கப்பட்ட தரப்பினருக்கு பிரதான செயலகத்தினால் ரூபா 375,000 தொகை 2012 ஒக்தோபர் 12 ஆந் திகதி செலுத்தப்பட்டிருந்ததுடன் அத்தொகையை மாகாண சபைக்கு அறவிட்டுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.13 அறவிடப்படவேண்டிய ஊழியர் கடன்கள்

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய ஊழியர் கடன் மற்றும் முற்பண மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 1,144,304,889 ஆக இருந்ததுடன், 01 ஆண்டிற்கு மேற்பட்ட காலமாகக் காணப்பட்ட அறவீடுகள் நிலுவையாக இருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 242,015,572 ஆக இருந்தது.

### 4.14 மாகாண அபிவிருத்தி திட்டம்

மீளாய்வாண்டிற்கான மாகாண அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் புதிய மற்றும் தொடர்ச்சியான வேலைகளின் கீழ் ரூபா 3,764,479,867 பெறுமதியான 6684 முன்மொழிவுகள் அங்கீகரிக்கப்பட்டிருந்தன. மாகாண சபையின் செயன்முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம், வேலை முன்மொழிவுகளின் முன்னேற்றம் கீழே அட்டவணையில் காண்பிக்கப்பட்டுள்ளது.

| | | புதிய வேலை | தொடர்ச்சியான வேலை | மொத்த வேலைத் திட்டங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | முழுமையாகப் பூர்த்தியாக்கப்பட்டவை | 6,143 | 28 | 6,171 |
| (ii) | 50% இற்கு குறைவாகப் பூர்த்தி செய்யப்பட்டவை | 21 | - | 21 |
| (iii) | 50% இற்கு மேலாக பூர்த்தி செய்யப்பட்டவை | 491 | - | 491 |
| (iv) | சர்ச்சைக்குரியவை | 01 | - | 01 |
| | மொத்தம் | 6,656 | 28 | 6,684 |

**4.15 போதியளவில் அடையப்படாத குறிக்கோள்கள்**

கணனிப் பாடநெறியைப் பயில்வதற்காக Semp செயற்திட்டத்தின் கீழ் 04 பாடசாலைகளுக்கு 51 கணனிகள் வழங்கப்பட்டிருந்த போதிலும், அப் பாடசாலைகளில் கணனிப் பாடத்தைக் கற்பிப்பதற்காக ஆசிரியர்கள் இல்லாமை காரணமாக குறித்த செயற்திட்டத்தினால் எதிர்பார்க்கப்பட்ட குறிக்கோள்கள் நிறைவேறியிருக்கவில்லை.

**4.16 போதிய அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல்வாங்கல்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இலஞ்ச அதிகாரச்சட்டத்தின் கீழ் குற்றம் சுமத்தப்பட்டு கட்டாய விடுமுறையில் அனுப்பப்பட்டிருந்த பயணிகள் போக்குவரத்துச் சேவைகள் அதிகாரசபையின் தலைவருக்கு முறைப்படி மீண்டும் சேவையில் அமர்த்தாது 2012 ஒக்தோபர் முதல் திசெம்பர் வரையான காலத்தில் ரூபா 419,250 தொகை தலைவர் படியாக சட்டரீதியற்ற முறையில் செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபையில் பணியாற்றிய 5 பட்டயப் பொறியிலாளர்களுக்காக மாதாந்தம் ரூபா 15,000 வீதமும், பட்டதாரிகள் மற்றும் அதற்கு இணையான தகைமைகளைக் கொண்ட 3 பொறியியலாளர்கள் மற்றும் கணக்காளர்களுக்காக மாதாந்தம் ரூபா 7,500 வீதமும் 08 உத்தியோகத்தர்களுக்கு முறைப்படியான அங்கீகாரமின்றி நிறுவனம் ரூபா 1,702,500 தொழில்சார் படியினை செலுத்தியிருந்தது.

**4.17 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

2012 ஆம் ஆண்டின் வருடாந்த பாதீட்டினால் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்காத 23 சந்தர்ப்பங்கள் தொடர்பில் நிறுவனரீதியான நடவடிக்கைகளாக கருதப்பட முடியாத பல்வேறு செலவினங்களுக்காக ரூபா 227,440 கூட்டுத்தொகை செலுத்தப்பட்டிருந்தது.

**4.18 நோக்கங்களுக்கு முரணான செயற்பாடுகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2007 சனவரி 18 ஆந் திகதிய 1480/16 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானிப் பத்திரிகையின் பிரகாரம் மத்திய மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்குச் சொந்தமான வீதிகளின் அபிவிருத்தி நடவடிக்கைகளிற்காக கிடைத்திருந்த ரூபா 89,106,711 மாகாண குறித்துரைத்த அபிவிருத்தி நிதியத் தொகை உள்ளூராட்சி நிறுவனங்களிற்குச் சொந்தமான (பிரதேச சபைகளிற்குரிய) வீதி முறைமையை திருத்தியமைப்பதற்காக பயன்படுத்தப்பட்டிருந்தது.

(ஆ) தடுப்பூசிகள் மற்றும் நோய் எதிர்ப்பு உலகளாவிய அமைப்பின் கீழ் சுகாதாரக் கட்டமைப்பை வலுப்படுத்துவதற்கான செயற்திட்டத்தின் நோக்கம் தாய் சேய் சுகாதார சேவைகளின் தரத்தினை உயர்த்துவதன் மூலம் சேவை வசதிகள் குறைவான பிரதேசங்களில் தாய் சேய் ஆரோக்கியத்தைப் பாதிக்கும் நோய்கள் காரணமாக ஏற்படுகின்ற மரணங்களின் எண்ணிக்கையினை குறைப்பதாக இருந்த போதிலும், அந்த நோக்கத்திற்கு முரணாக 06 சந்தர்ப்பங்களில் ரூபா 1,952,892 கூட்டுத்தொகை நிர்மாணங்கள் மற்றும் கொள்வனவுகளுக்காகச் செலவிடப்பட்டிருந்தது.

**5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**கூட்டிணைந்த திட்டம்**

சகல அமைச்சுக்களின் செயலாளர்கள், மாகாண சபைகளின் பிரதம செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், மாவட்டச் செயலாளர்கள் மற்றும் உள்ளூராட்சி நிறுவன தலைவர்களிற்கு முகவரியிடப்பட்ட 2010 மார்ச் 10 ஆந் திகதிய பீஎப்/ஆர்/2/2/3/5(4) ஆம் இலக்க அரசாங்க நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம் 2010 ஆம் ஆண்டிலிருந்து குறைந்தது தொடர்ந்துவரும் 03 ஆண்டுகளிற்காக கூட்டிணைந்த திட்டமொன்று வருடத்தின் ஆரம்பத்தில் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் மாகாண வருமானத் திணைக்களத்தினால் அத்திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

-----------------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்பபடுகின்றது.

(அ) கணக்குகளைத் தயாரித்தல்

(ஆ) வருமான நிர்வாகம்

(இ) இருப்புக் கட்டுப்பாடு

(ஈ) கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் கட்டுப்பாடு

(உ) ஒப்பந்த நிர்வாகம்

(ஊ) வாகனப் பயன்பாடு

(எ) பதவியணியனர் முகாமைத்துவம்